22 ஜனவரி 2023
(இறைவார்த்தை
ஞாயிறுக்கான செய்தி)

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 3 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது


மாதாந்திர கருப்பொருள்: **கல்வி**

# ஆயர் கூட்டொருங்கியக்கம் மற்றும் இறைவார்த்தை

கிறிஸ்துவில் அன்பான சகோதர சகோதரிகளே,

“இறைவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையிலான நிலையான உரையாடலில் அடங்கியுள்ள வற்றாத வளங்களைப் பாராட்டும் பொருட்டு, இறைவனுடைய வார்த்தைக்கு ஓர் ஞாயிற்றுக்கிழமையை முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும்” என்ற ஒரே சிந்தனையுடன் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திருத்தந்தை பிரான்சிஸ் இந்த இறைவார்த்தை ஞாயிறு தினத்தைத் துவக்கி வைத்தார். அதனை முன்னிட்டு கடவுளின் வார்த்தை வழியாக, இந்த ஞாயிறன்று உங்களை வாழ்த்தி உங்களோடு உரையாட வட்டார விவிலிய ஆணையம் விரும்புகிறது.

இன்று திருஅவையைச் சூழ்ந்துள்ள பிரச்சனைகளை அறிந்த திருத்தந்தை, திருஅவையின் ஆரம்ப பழக்கவழக்க வழிமுறைகளுக்குத் திரும்புவதற்கான ஈராண்டு செயல்முறைத் திட்டத்தை, அதாவது ‘சினோடலிட்டி’ எனப்படும் ஆயர் கூட்டொருங்கியக்கம் அதாவது ‘ஒன்றாகப் பயணித்தல்’ என்று பொருள்படும் திட்டத்தைத் தொடங்கினார். முறைகேடுகள், அதிருப்தி மற்றும் நம்பிக்கையாளர்களின் ஈடுபாடு அற்ற சூழல் திருஅவையில் நிலவும்போது, ‘ஒன்றாகப் பயணித்தல்’ என்ற இந்த செயல் முறையானது, நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியின் பிரகாசமான எதிர்காலத்திற்கு கடவுளின் மக்களாகிய முழு திருஅவையைத் தட்டி எழுப்பும் கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது.



திருவிவிலியமானது அலைந்து திரிந்த அரமேயர் எகிப்துக்குக் குடிபெயர்ந்தது (இச:26:5-10) தொடங்கி, விடுதலை பயணம் மற்றும் எம்மாவுசுக்குப் பயணித்த சீடர்களின் (லூக்: 24:13f) பயணங்களோடு, மத்திய தரைக்கடல் பகுதிகள் மற்றும் சிறிய ஆசியா வரை பயணித்த திருத்தூதர்கள் ஆகியோரின் பயணங்களைச் சித்தரிக்கிறது. “புதிய நெறியைச் சார்ந்தவர்கள்” (திப: 9:2) என்று அழைக்கப்பட்டவர்களான தொடக்கத் திருஅவையினர், இந்தப் பயண அனுபவத்தை அறிந்திருந்தபடியால், எருசலேம் சங்கத்தில் குறிப்பாக கிறிஸ்தவத்தைத் தழுவ, மதம் மாறிய யூதர் அல்லாதவர்களுக்காக முக்கிய முடிவுகளை எடுப்பதில் மேற்கண்ட அனுபவம் பெரும்பங்காற்றியது (திப:15) அவ்வாறே, இந்த ஆயர்கூட்டொருங்கியக்க மாமன்றமானது ஒன்றாகப் பயணம் செய்வதில் சீடர்களின், குறிப்பாக பேதுரு மற்றும் பவுல் ஆகியோரின் அனுபவங்களைக் கேட்பதால் முழு திருஅவையாக, ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு மிகவும் உதவி வருகிறது.

எனவே இந்த ஆயர் கூட்டொருங்கியக்க மாமன்றம் செவிமடுத்தல் மற்றும் உரையாடும் பண்பாட்டை வரவேற்கிறது. ஒருவருக்கொருவர் செவிமடுத்தல் மற்றும் கடவுளின் வார்த்தையைக் கேட்பதன்வழி, தூய ஆவியானவர் திருஅவைக்கு என்ன சொல்கிறார் என்பதை அறிய இறைமக்களுக்கு உதவியாக உள்ளது. “தூய ஆவியானவர், ஆண்டவருடைய வாக்குறுதியின்படி, இயேசுவின் நற்செய்தியின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதில் தன்னைக் குறைத்துக்கொள்ளா வகையில், அவருடைய வெளிப்பாட்டின் புதிய ஆழ்ந்த அம்சங்களை ஒளிரச்செய்து, திருஅவையின் பயணத்தைத் தக்கவைக்கத் தேவையான முடிவுகளை எடுக்க ஊக்குவிக்கிறார்”.(ஆயர் கூட்டொருங்கியக்க ஆயத்த ஆவணம் 16) இந்த செயல்முறை இறுதியில் ஒற்றுமை, பங்கேற்பு, மற்றும் தூதுப்பணி ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கி நம்மை பயணிக்க வைக்கிறது.

எனவே முதல்படியாக திருப்பலிக் கொண்டாட்டத்தின் போது இறைவார்த்தை வாசிக்கப்பட்டு, மறையுரையைக் கேட்டு, நற்கருணை திருவிருந்தில் தகுதியான மற்றும் பயனுள்ள வகையில் பங்கேற்பதற்காக, திருப்பலிக்கு முன்னதாகவே வாசகங்களை முறையாக வாசித்து, உங்களைத் தயாரிக்குமாறு உங்கள் ஒவ்வொருவரையும் ஊக்குவிக்கிறேன். இறைவார்த்தை-பகிர்வு குழுக்களில் சேரவும், பங்கேற்கவும் முயற்சி செய்யுங்கள். இது கடவுளின் வார்த்தையை ஆவியின் தூண்டுதலால் வாள்போல் ஊடுருவி நமது எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகள் மூலங்களைத் துளைத்து, இதயம் மற்றும் மனதை ஒரு சமய நல்லிணக்கத்திற்கான மாற்றத்தைக் கொண்டுவர உதவுகிறது. இந்த இறைவார்த்தை ஞாயிற்றுக்கான மையச் செய்தியான “கனவுகளை விதைக்கவும், முன்னறிவிக்கப்பட்ட வாக்கு நிறைவேறவும் மற்றும் தூரநோக்கு சிந்தனைகளை முன்வைக்கவும், நம்பிக்கை செழிக்க அனுமதிக்கவும், நம்பிக்கையை ஊக்குவிக்கவும், மனக்காயங்களை ஆற்றவும், உறவுகளை பிணைக்கவும், நம்பிக்கையின் விடியலை எழுப்பவும்” திருஅவையை ஆயர் கூட்டொருங்கியக்க மாமன்ற பேரவை வழியில் முன்னோக்கிக் கொண்டு செல்வதாக அமையட்டும். (PD.32)


Rt. Rev Bishop Richard Ng

தலைவர், வட்டார திருஅவை விவிலிய ஆணையம்,

மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை.


**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே.

(திபா:119:105)

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா 8: 23-9:3;

திருப்பாடல் 27: 1,4,13-14;

1 கொரிந்தியர் 1: 10-13,17;

மத்தேயு 4: 12-23 (அ) 4: 12-17.


*Published by:*
Peninsular Malaysia
Pastoral Team

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 04/2023